> ஆண்டவரின் இரக்கம் ஒவ்வொரு ஆன்மாவிற்கும் எவ்வளவு தேவை என்பதை அதிகமாக உணருகிறேன்
>
> – புனித ஃபொஸ்தினா

சிலுவையில் இரத்தமும் தண்ணீரும் வடிந்த அவரது இருதயத்தின் ஆழங்காண இரக்கத்தில் நம்மை இணைந்து கொள்ள விரும்புகிறார்.

புனித 2ம் அருள் பவுலை, இரக்கம் மிகுற்த திருத்தந்தை என நினைவுகூருகிறோம். அவரின் பெரும்பாலான எழுத்துகளில் மறையுரையில் ஆண்டவரின் இரக்கமே மையமாக இருந்தது. இரக்கத்தின் அடையாளமாக இருந்த அந்த திருத்தந்தை, உலகச் சவால்களுக்கு ஆண்டவரின் இரக்கமே விடை என கூறியுள்ளார். ஒருமுறை போலந்து நாட்டின் கெரக்கொவ்விலுள்ள இரக்கம் மிகுந்த ஆண்டவரின் திருத்தலத்திற்குச் சென்ற போது அவர் கூறியது, “மனிதனை அவனது பலவீனத்திலிருந்து எல்லையற்ற இறையருளுக்கு உயர்த்திக் கொண்டு செல்லும் ஆண்டவரின் இரக்கத்தைத் தவிர வேறு ஒன்றுமில்லை - அவரின் அன்பு, தயாளமும் கரிசனையும் கொண்டது”

நம் ஒவ்வொருவரையும் கடவுள் அன்பு செய்கிறார். நமது பாவங்களை விட அவரது இரக்கம் வலிமையானது என்பதை நாம் உணர வேண்டுமென அவர் விரும்புகிறார். இதனால் முழு நம்பிக்கை கொண்டு அவரை நாடி நாம் வருவோம். நமது இதயத்தில் என்றுமே பதிய வேண்டிய இரக்கம் மிகுந்த ஆண்டவரின் செய்தி.

அவரது இரக்கத்தை நாடுவோம். இறைவேண்டுதலில் அவரை அணுகுவோம், பாவத்திற்கு வருந்தி, அவரது இரக்கத்தை நம்மீதும் உலகத்தின் மீதும் பொழிய வேண்டுவோம்.

இரக்கமுள்ளவர்களாய் இருப்போம். அவரது இரக்கத்தைப் பெற்று, நம் வழியாக மற்றவர்களும் இரக்கத்தைப் பெற கடவுள் விரும்புகிறார். அவரைப் போல, அன்புக் கரம் நல்கி, மற்றவர்களுக்கும் மன்னிப்புக் கொடுப்போம். பலியை அல்ல, இரக்கத்தையே ஆண்டவர் விரும்புகிறார்.

இயேசுவை முழுமனதோடு நம்புவோம். நமது நம்பிக்கையில்தான் அவரது இரக்கத்தின் அருள் அடங்கியிருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டுமென ஆண்டவர் விரும்புகிறார்.

திருத்தூதர் பணி 2:43-47, தொடக்க காலக் கிறிஸ்துச் சமூகங்களின் வாழ்க்கை நமக்கு எடுத்துக்காட்டு. இறைவேண்டல் செய்வதிலும் அப்பத்தைப் பிட்டு பகிர்ந்து, சாட்சிய வாழ்வு வாழவும் அழைக்கப்படுகிறோம். ஆண்டவரின் இரக்கம் தேவைப்படும் சிதறுண்ட உலகத்திற்குக் கிறிஸ்துவின் சாட்சியாக, நமது அதிசு-கள் பல வகைகள் விளங்க முடியும்.

ஆண்டவரின் இரக்கம் என்றும் நிலைத்திருக்கும். அதனைச் சொந்தமாக்கிக் கொண்டு, மற்றவோடு பகிர்ந்து கொள்வோம்! ✝

### இன்றைய வாசகங்கள்:

திப. 2: 42-47

திபா. 117: 2-4, 13-15, 22-24

1 பேதுரு 1: 3-9

யோவா. 20: 19-31

### வாரம் ஒரு வசனம்

நமது பாவங்களை விட அவரது இரக்கம் வலிமையானது

INTERNAL CIRCULATION ONLY
BUL 16/2020

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

19 ஏப்ரல் 2020

# Newbec

NEW WAY OF BEING CHURCH பாஸ்கா காலம் இரண்டாம் ஞாயிறு (அல்லது இரக்கத்தின் ஆண்டவர் திருவிழா)

மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்



மாதாந்திர கருப்பொருள்:

**பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்**

# என்றென்றும் உள்ளது ஆண்டவரின் இரக்கம்

இன்றைய நற்செய்தியில், இயேசு உயிர்த்து, உயிரோடிருக்கிறார் என்பதை நம்புவதற்கு ஆதாரம் அல்லது அறிகுறி கேட்கிறார், தோமா. நம் மனதிலும் இக்கேள்வி எழுந்திருக்கிறது என்ற எண்ணத்தில் அவரைப் பார்க்கிறோம் அல்லா? அவரைப் போல் இல்லாமல் இருக்க விரும்புகிறோமா? அந்த சந்தேக மனிதரை, இரக்கமுள்ள ஆண்டவர் சந்திப்பது போல, நமது சந்தேக நேரத்தில் நம்மை இயேசு சந்திக்க விரும்புகிறார் என்பதை நம்பிக்கையில் நாம் அறிவோம்.




**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. கென்னத் கோபால்


*2020 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்***
*2020 மார்ச் (பங்குனி) மாதத்தின் கருப்பொருள்:*
***கடவுள் உன்னில் பேருவகை கொண்டுள்ளார்***

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** உயிர்ப்புக் காலம் 2ஆம் ஞாயிறு - இறை இரக்க ஞாயிறு 18 - 26 ஏப்பிரல் 2020
தி.பணி 2 :42-47 தி.பா: 118: 2-4, 13-15, 22-24 1 பேதுரு 1: 3-9 யோவான் 20: 19-31
**" ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள் ஏனெனில் அவர் நல்லவர், என்றென்றும் உள்ளது அவர் பேரன்பு." - தி.பா 118**

**நன்கொடை / காணிக்கைகள்**
**கீழ்க்கண்டவற்றில் எதற்கு நன் கொடை அல்லது காணிக்கை செலுத்துகின்றீர்கள் என்று குறிப்பிடவும்:**
(1)பங்கின் நிதி (2) திருப்பலி கருத்துகள்
(3) ஆராதனை அறை சீரமைப்பு (4) பமமேப உணவு வங்கி

**உங்களுடைய தொகையை இணையத்தின்வழி பங்கின் வங்கிக் கணக்கில் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். விவரங்கள் :**

| | |
|---|---|
| 1.வங்கியின் பெயர்: | **Public Bank Berhad** |
| 2.வங்கிக் கணக்கில் உள்ள பெயர்:: | **Church of Visitation** |
| 3.வங்கிக் கணக்கு எண்: | **3121194612** |

**பணம் செலுத்தியபின் எதற்கு நீங்கள் பணம் செலுத்தினீர்கள் என்பதை குறிப்பிட மறவாதீர்கள்:**

**(i) தொகை (ii) என்ன காராணம்:**
**(1) பங்கின் நிதி காணிக்கை**
**(2) திருப்பலி கருத்துகள் (பெயர்) - ஆன்ம இளைப்பாற்றி, நன்றி, அல்லது தனிப்பட்ட கருத்துகள்**
**(3) ஆராதனை அறை சீரமைப்பு**
**(4) பங்கு மனித வள மேம்பாட்டின் உணவு வங்கி ( கூடுதல் தகவல்களுக்கு:: ஜோன் டேவிட்சன்(017-615 8961) அல்லது பௌ்னதெத் (012- 2715840)**

**பங்கு அலுவலக குறிப்புகளுக்காக, நீங்கள் பணம் செலுத்திய ரசீதை பங்கின் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.** serembanvisitation@gmail.com

**கொவிட் 19, நோய் பரவல் காரணமாக, ஆலயத்தில் திருப்பலிகள் நடைபெறாது**

ஹெரால்ட் வார இதழ், இணையத்தின் வழி படித்து தெரிந்துகொள்ளலாம்: **www.heraldmalaysia.com**

பங்கு அலுவலகம் ஏப்ரல் 28 வரை மூடப்பட்டிருக்கும்.
அவசர தேவைகளுக்கு தொடர்பு கொள்ள: நாதன் 012-684 0750) கொலின்ஸ் (016-364 7506)

2020 ஏப்பிரல் *(சித்திரை) மாத செய்திகள் / நிகழ்வுகள்*
1. பங்கு காணிக்கை:
11/12 ஏப்பிரல் ________

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக

***மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்.***

வின்செண்ட் தோ யு சௌ - இறப்பு:14/4

***முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக***

**ஒரு அழைப்பு:**

அன்புள்ள சகோதர சகோதரிகளே! அருட்பணி கென்னத் மற்றும் நானும் இணைந்து, உங்கள் ஒவ்வொருவருக்கும் வாழ்த்துகளையும் அமைதியையும் கூறிக்கொள்கிறோம். கொவிட் 19 முன்னிட்டு, பாதுகாப்பாகவும், உடல் நலத்தோடும் உங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் இவ்வேளையில், தனிப்பட்ட செபத்திற்கும், குடும்ப செபம், விவிலியம் வாசிப்பது, அமைதியில் தியானிப்பது ஆகியவற்றில் ஈடுபடுமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறோம். அமைதியில் தியானிப்பது உங்களுக்கு அவ்வளவாக பழக்கம் இல்லாவிட்டாலும், ஒவ்வொரு நாளும் சிறிது நேரம் உங்களுடைய மூச்சுப் பயிற்சியை ஒருமுகப்படுத்துவதின் வழியாக நம்முடைய நன்றியறிதலை ஆண்டவருக்கு தெரிவிக்கலாம். இதனால், உங்களுடைய மன அழுத்தத்தை குறைத்து மனதை அமைதிப்படுத்தமுடியும்.
அதே வேளையில், கொவிட் 19 ஆல் பாதிக்கப்பட்டுள்ள அனைவருக்காகவும், இதனால் மரித்த ஆன்மாக்கள் அவர்களுடைய குடும்பங்களுக்காக செபிக்க மறக்க வேண்டாம். மேலும் இதற்காகப் பணிபுரியும், காவல்துறை, மருத்துவ குழுவினர், ஒவ்வொரு நிலையிலும் தங்கள் பணியினைத் தரும் அனைவரின் தியாகத்திற்காகவும், சேவைக்காகவும், செபிப்போம். நன்றி கூறுவோம்.

உங்களைப் பத்திரமாகப் பாதுகாத்து கொள்ளுங்கள்: ஆசீரும் அமைதியும் உரித்தாகுக: அருட்பணி சேவி, & கென்னத்

- **நடமாட்டக் கட்டுப்பாட்டை முன்னிட்டு, இறப்பு சடங்குகளுக்கான வழிமுறைகள்.**
  (1) வீடுகளில் அல்லது பார்லரில் ஏழு நாள் செப வழிபாடு நடைபெறாது. குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே தனிப்பட்ட வகையில் செப வழிபாட்டை நடத்திக்கொள்ள வேண்டும். இதற்குத் தேவையான செப புத்தகங்கள் பங்கு/அதிச விலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.. இறப்பு இல்லத்தில் நெருங்கிய உறவினர்கள் மிக குறைவான நேரமே இருக்க முடியும்.
  (2) விழிப்பு செபங்கள் பங்கு குருவானவரால் இல்லத்திலேயே நடத்தப்பட வேண்டும். இது நம்முடைய நாட்டின் நடமாட்டக் கட்டுப்பாட்டு வழிமுறைகளின்படி இறப்பு இல்லத்தில் அதிகமான நபர்களைக் கட்டுப்படுத்த உதவும். மேலும் இதனால் நம்முடைய ஆலயமும் எந்த வழிபாட்டுக்கும் திறந்திருக்காது.
  (3) இந்த நேரத்தில் பிற சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் கடைப்பிடிப்பது அவசியம். (இடைவெளியைக் கடைப்பிடித்தல்)
- ஏப்ரல் மாதத்தில் முன்பதிவு செய்யப்பட்ட திருமணங்கள் வேறு தேதிகளுக்கு மாற்றிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

- தினமும் இணையத்தின் வழி திருப்பலிகளில் பங்கெடுக்க: ***www.Tv.ArchKL.org***

*ஏப்ரல் 20-24 , 2020*

| | | | | |
|---|---|---|---|---|
| ***சனிக்கிழமை:*** | ***18-04-2020:*** | ***மாலை*** | ***6.00*** | ***தேசிய மொழி*** |

**இறை இரக்கத்தின் ஞாயிறு:**

| | | | | |
|---|---|---|---|---|
| ***ஞாயிறு*** | ***19-04-2020:*** | ***காலை*** | ***7.30*** | ***தமிழ்:*** |
| | | ***காலை*** | ***9.00*** | ***மாண்டரின்*** |
| | | ***காலை*** | ***0.00*** | ***ஆங்கிலம்*** |
| | | ***பகல்*** | ***3.00*** | ***ஆங்கிலம்*** |
| ***வார நாட்கள் (ஏப்ரல் 20-24)*** | | ***மாலை*** | ***6.00*** | ***ஆங்கிலம்*** |